## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 1-10 - கண்ணார் கடல் சூழ்
## (திருவேங்கடம் 3)

1038 * கண்ணார் கடல் சூழ் * இலங்கைக்கு இறைவன் தன் *
திண்ணாகம் பிளக்கச் * சரம் செல உய்த்தாய்! **
விண்ணோர் தொழும் * வேங்கட மாமலை மேய *
அண்ணா! அடியேன் * இடரைக் களையாயே 1

1039 இலங்கைப் பதிக்கு * அன்று இறையாய[1] * அரக்கர்
குலம் கெட்டு அவர் மாளக் * கொடிப்புள் திரித்தாய்! **
விலங்கல் குடுமித் * திருவேங்கடம் மேய *
அலங்கல் துளப முடியாய்! * அருளாயே 2

1040 நீரார் கடலும் * நிலனும் முழுதுண்டு *
ஏர் ஆலம் இளந்தளிர் மேல் * துயில் எந்தாய்! **
சீரார் * திருவேங்கட மாமலை மேய *
ஆராவமுதே! * அடியேற்கு அருளாயே 3

1041 உண்டாய் உறி மேல் * நறுநெய் அமுதாக *
கொண்டாய் குறளாய் * நிலம் ஈரடியாலே **
விண்தோய் சிகரத் * திருவேங்கடம் மேய *
அண்டா! அடியேனுக்கு * அருள் புரியாயே 4

1042 தூணாய் அதனூடு * அரியாய் வந்து தோன்றி *
பேணா அவுணன் உடலம் * பிளந்திட்டாய்! **
சேணார் * திருவேங்கட மாமலை மேய *
கோணாகணையாய்! * குறிக்கொள் எனை நீயே 5

1043 மன்னா * இம்மனிசப் பிறவியை நீக்கி *
தன்னாகித் * தன் இன்னருள் செய்யும் தலைவன் **
மின்னார் முகில் சேர் * திருவேங்கடம் மேய *
என்னானை என்னப்பன் * என் நெஞ்சில் உளானே 6

1044 மானேய் மடநோக்கி திறத்து * எதிர் வந்த *
ஆனேழ் விடை செற்ற * அணிவரைத் தோளா! **
தேனே! * திருவேங்கட மாமலை மேய *
கோனே! என் மனம் * குடி கொண்டு இருந்தாயே 7

1045 சேயன் அணியன் * என சிந்தையுள் நின்ற
மாயன் * மணிவாள் ஒளி * வெண்தரளங்கள் **

[1] என்று இறை

வேய் விண்டு உதிர் * வேங்கட மாமலை மேய *
ஆயன் அடி அல்லது * மற்று அறியேனே 8

1046 வந்தாய் என் மனம் புகுந்தாய் * மன்னி நின்றாய்! *
நந்தாத கொழுஞ்சுடரே! * எங்கள் நம்பீ! **
சிந்தாமணியே! * திருவேங்கடம் மேய
எந்தாய்! * இனி யான் உன்னை * என்றும் விடேனே 9

1047 * வில்லார் மலி * வேங்கட மாமலை மேய *
மல்லார் திரள் தோள் * மணிவண்ணன் அம்மானை **
கல்லார் திரள் தோள் * கலியன் சொன்ன மாலை *
வல்லார் அவர் * வானவர் ஆகுவர் தாமே 10

**அடிவரவு:** கண் இலங்கை நீர் உண்டாய் தூணாய் மன்னா மானேய் சேயன்
வந்தாய் வில் வானவர்